


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமறியா வீரர்களுக்காக

ஆசிரியர் :

மட்டுவில் ஞானகுமாரன்

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

ஞானம் பதிப்பகம்
SEMINAR-STR-2,
49074 OSNABRUICK,
GERMANY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ➢ **முகமறியா வீரர்களுக்காக** |
| ஆசிரியர் | ➢ மட்டுவில் ஞானகுமாரன் |
| மொழி | ➢ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ 2000 |
| பதிப்பு விபரம் | ➢ முதல் பதிப்பு |
| உரிமை | ➢ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ 112 |
| நூலின் விலை | ➢ ரூ. 23.00 |
| வெளியிட்டோர் | ➢ ஞானம் பதிப்பகம், ஜேர்மனி. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

ஈழத்தின் தாயக விடுதலைக்காக தங்களையே நெய்யாக்கி தீ வளர்ந்த பின் எம் கண்களை ஏமாற்றி மறைந்து, விண்ணுலகில் வாழும் வேங்கைகளுக்கும் விடுதலைக்கு விலையாகிப்போன இனிய உறவுகளுக்காகவும் -

மண்ணின் மேனி எங்கும் அன்னியன் போட்ட அடிமை விலங்கை உடைக்கப் புறப்பட்டு விடுதலையின் வாசல்வரை வந்து வழிகாட்டித் தந்தவர்களுக்காக முகமறியா வீரர்கள் என்ற இக்கவிதை நூலைக் காணிக்கை ஆக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

ஈழமுரசு

இளைஞன்

ஐரோப்பியத் தமிழ் வானொலிகள்
(I.B.C, T.R.T)

களத்தில்

தமிழன்சிறி

கல்கண்டு

பூவரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | முகமறியா வீரர்களுக்காக... | 25 |
| 2. | சூறாவளிக்கு ஓய்வேது? | 28 |
| 3. | வானம் வெளுக்கிறது | 30 |
| 4. | கொலை வேண்டாம், வாழ ஒரு வழி தருவாய்! | 33 |
| 5. | முகமறியா வீரர்களுக்கு எம் சிரம் தாழ்த்திய வணக்கங்கள் | 37 |
| 6. | வணங்குகிறேன் தாயே! | 40 |
| 7. | கருகிப்போன கிருசாந்திக்காய் | 43 |
| 8. | சிறைக்கதவுகள் சிதறட்டும் | 45 |
| 9. | சிறுகவிகள் | 48 |
| 10. | எனக்குள் வாழ்பவளே! | 51 |
| 11. | வழியில்லை | 54 |
| 12. | நாற்றுகள் | 56 |
| 13. | என்றுதான் வாழக்கூடும்? | 58 |
| 14. | போகின்றேன் | 61 |
| 15. | தேன் சொட்டும் தமிழில் சுவையில்லையோ! | 62 |
| 16. | ஓ வீரனே! | 63 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 17. | கறுப்புயூலையில் ஒரு நெருப்பு மலர் | 70 |
| 18. | சன்னிதியில் ஒரு சரித்திரமானவன்! | 72 |
| 19. | சாகா வரமெடுத்த சிவகுமாரன் | 75 |
| 20. | மானமாயேனும் சாகவிடு! | 77 |
| 21. | தாயே உனக்காக! | 81 |
| 22. | உன்னையே எண்ணிப்பார்! | 84 |
| 23. | உன் பணி தொடரட்டும்! | 87 |
| 24. | சிறு கவிதைகள் | 89 |
| 25. | நெருப்பு மனிதன் | 91 |
| 26. | மறக்க முடியவில்லை! | 93 |
| 27. | இன்றுவரை தேடுகிறோம் | 96 |
| 28. | வழியில்லை | 98 |
| 29. | மனிதருக்காய் புனிதமானவர் | 100 |
| 30. | மேதின ஏக்கங்கள் | 103 |
| 31. | பொறுத்திரு சங்காரம் விரைவில் நடக்கும் | 105 |
| 32. | ஈழம் | 108 |
| 33. | தேசம் பிரிந்த நேசக் குழந்தை! | 110 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என் அன்பான தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கங்கள்!

நீறு பூத்த நெருப்பாக குமுறிக் கொண்டிருக்கும் வேதனைத் தீயையும், எரிமலையாக வெடித்துக் கொண்டிருக்கும் அநீதிக்கு எதிரான போராட்டங்களின் வேகத்தையும் எழுத்து வடிவில் கொண்டு வர நான் எடுத்த முதல் முயற்சி இது.

நான்கு சுவர்களுக்குள்ளே அழுது வடித்து ஈசனை வேண்டி, கண்ணீரால் உப்பிட்டு சோறூட்டிக் கொண்டிருந்த காலம் போய் வியக்கத்தக்க வியூகங்களுக்கு வழிகாட்டி நிற்கின்ற அன்னையர்கள் பற்றியும், மாவீரர்களின் தியாகங்கள், வேகங்கள் ஈழத்து சோகங்கள் என்பவை பற்றியும் கவிவரிகள் மூலம் உருவம் கொடுத்து தடம் பதிக்க முனைகிறேன்.

உலகத்தின் பார்வைகளால் உயர்ந்து நோக்கப்படும் விடுதலை வீரர்களின் சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்கிறேன் என்ற திருப்தியிலும், ஏற்கனவே தமிழ்கூறும் நல்உலகிற்கு உணர்ச்சிக் கவிகளைப் படைத்து வரும் வீரக்கவிஞன் காசி ஆனந்தன் அண்ணன் ஆசிபெற்று அவர் வழியில் காலடி தொடர்கின்றேன் என்ற எண்ணத்திலும் மனது நிறைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து மேடைகள் போட்டு கூவிக் குரல்கொடுக்கும் மற்றைய கவிஞர்களுடனும் கலைஞர்களுடனும் சேர்ந்தே நானும் தோள் கொடுக்க வந்திருக்கின்றேன். பல நேரங்களில் நான் மக்கள்படுகின்ற துன்பங்களை எண்ணி மனதுக்குள்ளேயே கண்ணீர் வடித்திருக்கின்றேன்.

அந்தக் கண்ணீர் தொட்டு எழுதிய கவி வரிகளைச் செந்நீர் சிந்தி செத்து மடியும் வீரர்களின் கல்லறையில் காணிக்கை ஆக்குகின்றேன். நான் சொல்லும் சேதிகள் தமிழ் மக்களின் நெஞ்சங்களைத் தட்டவேண்டும். அவர்கள் அனைவரும் ஒரே பாதையில் சேர்ந்து நீதிக்காய் குரல் கொடுக்கவேண்டும் என்பதே என் அவா.

பெரிய பெரிய தமிழ் அறிஞர்கள் எல்லாம் எவ்வளவோ சாதனைகளைச் செய்து குவித்தபோதும் இன்றும் தங்களை ஒரு மாணவனாகவே கருதும்போது நானோ மாணவப்படியைக் கூடத் தாண்டாத ஒரு பாலகனாக உங்கள் முன் அறிமுகமாகின்றேன்.

தமிழை நெஞ்சிலும் தமிழனைத் தோளிலும் சுமக்கும் அந்த வீரர் கானம்பாட தொடர்ந்தும் உங்கள் ஆதரவும் ஆசியும் வேண்டி *முகமறியா வீரர்கள்* என்ற கவிதைத் தொகுப்பை உங்கள் முன்வைத்து உங்கள் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும்,

***மட்டுவில் ஞானகுமாரன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"புதுக்கவிதை" என்று சொல்லப்படும் இலக்கியத்தை 'நறுக்குகள்' என நான் அழைக்கிறேன். உரைநடையின் ஒரு புதிய வீச்சாகவே 'நறுக்கு' இலக்கியம் தோன்றிற்று. 'புதுக்கவிதை' என்பது எந்த வகையிலும் பா (கவிதை) ஆகாது.

மேனாட்டார் இதனைப் 'பா' இலக்கியம் என்பது மெய்யே.

ஆனால்,

மொழியின் - இலக்கியத்தின் தோற்றத்தில் தமிழனுக்கு மிகமிகப் பிந்திய ஆங்கிலேயனும் பிரெஞ்சுக்காரனும் மொழிவதெல்லாம் சரி என்று ஆகிவிடாது.

எசுறா பவுண்டும், வால்ட் விட்மனும் இலக்கியத்தில் எங்களுக்கு வழிகாட்டத் தேவையில்லை.

நறுக்கு இலக்கியமும் நல்லிலக்கியமே. பாவைப்போல் ஒழுங்குற - ஓசைபடச் சொற்களைக் கொட்டாமல் - சிதறலாக அள்ளி எறிவது நறுக்கு.

மட்டுவசில் ஞானகுமாரன் நறுக்கு இலக்கியத்தில் மனமொன்றி நிற்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்றோ நாளையோ
உயிர் பிரியும்
தூக்கி ஒரு ஆற்றில்
வீசுவார்கள்
அன்றேல்...
தப்பி ஓடினான்...
சுட்டோம் என
சிங்கள நாளிதழில்
செய்தி வரும்
நாடற்றவனாய்...
அடிமையாய்..
வேண்டாம் தாயே

மானமாய்
நான் சாகவேணும்
ஒருவரம்
தாவேன்"

சாவிலும் மானத்தைத்தேடும் ஞானகுமாரனின் சாகாத தமிழ்.

மட்டுவில் ஞானகுமாரனின் முதல் முயற்சிதான் அவர் படைத்துள்ள நறுக்குகளின் இச்சிறு தொகுப்பு. எனினும் ஆங்காங்கே கட்டுடைத்து வரும் அவர் சொல்வீச்சைப் பார்க்கும்போது இந்த முகை நாளை முழு மலராய் மணம் பரப்பும் என்று உறுதியாக நம்ப முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தூக்குத்தான்
முடிவெனில்
பத்துவயதுப் பாலகியை
வல்லுறவு கொண்ட
வல்லூறுகளைத் தூக்குங்கள்!

தேவாலயத்தில்
அடைக்கலம் தேடிய
உயிர்களை
கருக்கிக்கொன்ற
கயவரைத் தூக்குங்கள்!

வெலிக்கடைச் சிறையில்
வெறுங்கைககளோடு இருந்த
எங்கள் தோழரின்
கண்களைத் தோண்டிய
பாம்புகளைத் தூக்குங்கள்!"

மட்டுவில் ஞானகுமாரனின் மனம் புயலாய் வெடிக்கிறது.

இப்படித்தான் முளைவிட்டு வரும் தன் இலக்கிய ஆற்றலை ஞானகுமாரன் இந்நூலில் முடிந்தவரை பதிவு செய்திருக்கிறார்.

அவர் எழுத்துக்களில் அன்னை மண் அப்பியிருக்கிறது.

தம்பி ஞானகுமாரனின் தமிழ் தழைக்க வாழ்த்துகிறேன்.

சென்னை
25-8-200

காசி ஆனந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**"மண்ணை மீட்கிறேன்**
**இன்றேல்**
**மடிந்து வீழ்கிறேன்"**

என்ற உறுதியோடு, ஈழத்தில் களம் நோக்கிப் புறப்பட்ட எண்ணற்ற போராளிகளை "முகமறியா வீரர்கள்" என்னும் தன் கவிதை நூலில் பாடுபொருளாக்கியுள்ளார், ஜேர்மனியில் வாழும் நண்பர் மட்டுவில் ஞானகுமாரன்.

மட்டுவில், அவர் பிறந்த மண்; ஜேர்மனி, அவர் வாழும் தேசம். மேலைநாடுகளில் கிளை பரப்பியிருந்தாலும், அவர் இன்னும் பிறந்த மண்ணில்தான் வேரூன்றி நிற்கிறார் என்பதை அவர் கவிதைகள் காட்டுகின்றன. பன்னீர் மரங்கள் இன்று நிழல் கொடுத்தாலும், பனை மர அழகை அவர் மறக்காமல் இருக்கின்றார்.

அவர் கவிதை நூலிலிருந்து 12 பக்கங்கள் மட்டுமே நான் படிக்கக் கிடைத்தன. அத்தனை பக்கங்களிலும் அவரது தாயகப் பற்று ஒட்டிக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மானத்தோடு சாகவிடு' என்னும் பொருளில் எழுதப்பட்டிருக்கும் கவிதை படிப்பவர்களின் கண்களைக் கலங்க வைக்கின்றது.

''நீ ஒரு புலியா?
மின்சாரமாய்த் தாக்கியது
மறுகேள்வி
முகத்தை மறைத்தபடி இல்லை என்றேன்
இரும்புப் பாதணியில்
நெஞ்சில் ஒருவன் ஓங்கி உதைத்தான்
எங்கிருந்து எந்தத் தாக்குதல்
எனத் தெரியாத வேளை...''

என்கிறது அந்தக் கவிதை. சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்துச் செல்லப்பட்ட கல்லூரி மாணவன் ஒருவன் எப்படி 'விசாரணை' செய்யப்படுகின்றான் என்பதைத்தான் இந்தக்கவிதை சொல்கின்றது. இன்னும் சில வரிகள் தாண்டிப்போனால்,

''போகும்போதும் வரும்போதும்
சிங்களக் கைதிகள்
காறி உமிழ்ந்தனர்.
சாகும் வரம் கேட்டுச்
சாமியை வேண்டினேன்''

என்று தொடர்கிறது அச்சோகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை கொடுமைகள் அங்கு நடந்து கொண்டிருக்க இங்கு எத்தனை எளிதாய்ச் சிலர் சொல்கின்றனர், "பேச்சு வார்த்தையில் எல்லாவற்றையும் பேசித் தீர்த்து விடலாம்" என்று!

தனி ஈழம் தவிரத் தீர்வு ஏதுமில்லை என்பதை இக்கவிதைநூல் நுட்பமாய் உணர்த்துகின்றது. அத்தீர்வை நோக்கிய போராட்டத்திற்கு, இந்நூலும் தன்னால் இயன்றதைச் செய்கின்றது.

இயந்திரத் துப்பாக்கியை ஏந்திய பின்னரும், எழுதுகோலைத் தூக்கி எறிந்துவிட முடியாது என்பதற்கு இன்றைய ஈழ இலக்கியங்கள் சான்றாய் உள்ளன.

ஈழ விடுதலைக்கு இன்னுமொரு படைக்கலமாய் இந்நூலும் உதவட்டும்!

நண்பர் மட்டுவில் ஞானகுமாரனுக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

தோழமையுடன்

சென்னை - 87
24.08.2000

**சுப. வீரபாண்டியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

தாய் மண்ணுக்கும் தமிழுக்கும் வணக்கம்!

மட்டுவில் ஞானகுமாரன் அவர்களின் "முகமறியா வீரர்களுக்காக" - புதுக்கவிதைத் தொகுப்புநூல் வெளிவருவதை தமிழினத்தார் யாவரும் என்னைப் போலவே மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள்.

கவிதையின் கருப்பொருள் - நெருப்பால் சுடும் கவிஞரின் உணர்வலையின் வீச்சு! எதிர்பார்ப்பின் மூச்சு! இன்று இதைப்பற்றித்தானே உலகெங்கும் பேச்சு!

"என்று தணியுமெங்கள் சுதந்திர தாகம்" - இது மகாகவியின் மோகம். வென்று தணியுமெங்கள் விடுதலை மோகம்! - விரைவில் - இது ஞானகுமாரன் போன்ற தமிழீழ இளைஞர்களின் தாகம்!

"புலிபிடிக்கப் போவதாய்க் கூறி எலி பிடிக்கும் எத்தனின் - எதிரியின் வால்பிடிக்கும் வஞ்சகனின் நெஞ்சை நெருப்பிலிடத் துடிக்கும்" கவிஞரின் வரிகள் உண்மையில் நெருப்புக் காற்றுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தேசம் பிரிந்த நேசக் குழந்தை* என்ற தலைப்பில் இழப்பு இல்லாமல் விடியல் இல்லை - ஆனால் நான் என் அவர்களை மட்டும் இழக்க மாட்டேன். ஏனெனில் ஈழத்தின் விடியலைக் காணவேண்டும்! என்று கூறுமிடத்தில் தேசம் விட்டுப் போனாலும் - மண் வாசம் விட்டுப் போகாது! - என்பதை நிரூபிக்கிறார்.

*வானம் வெளுக்கிறது* என்ற தலைப்பில் விடியலை எதிர்பார்த்து விடியற் காலையில் எதிரே பார்த்த இளைஞனின் முகமறியா வீரனின் வீரத்துக்கு வணக்கமிடும் இடத்திலும்-

*நாற்று* என்ற தலைப்பில் புறநானூற்றை இதுவரை பதிப்பித்தோம் - இனியதைப் புதுப்பிப்போம்! என்று கூறுமிடத்திலும் *வணங்குகிறேன் தாயே!* என்ற தலைப்பில் மலர்களை மீட்கிறேன்! இன்றேல் மடிந்து சாகிறேன்! - என்று முழக்கமிடுமிடத்திலும் கவிஞர் பரணேறி பரணி பாடுகிறார்.

*அதோ தெரிகிறது தமிழீழம்! - அதை அடைவோம் இனி ஏன் சந்தேகம்!* தென் திசை விடியும்! - பண்ணிசை பிறக்கும்! மட்டுவில் ஞானகுமாரனின் கவிதை விதையாகி - வேரூன்றி - விளைச்சலைத்தரும்! நாளை இந்த வரலாறு காவியமாகும்.

நன்றி உணர்வுடன்



*புஷ்பவனம் குப்புசாமி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## *ஆழியின் அலைகள், தாலாட்டுப் பாடும்!!*

இளங்கவிஞரே! நீர் ஓர் வளர்பிறை! தம்பி ஞானக்குமாரா! உமது மடல் மகிழ்ச்சியளித்தது. கைத்தாளம் போட வரும் உமது கவிதைத் தொகுப்புக்கு, நாமகளின் நல்லாசிகள்! கலைத்துறையில் இன்னும் மாணவனாக இருக்கும் என்னிடம், ஆசிச் செய்தி கேட்டிருந்தீர், நன்றி மேல் நன்றிகள்!

இணைத்திருந்த சில கவிதைத் தொகுப்புகளைப் படித்தேன், பரவசமே! ஆழ்கடல் அலைகளில் மூழ்கி, முத்தெடுத்து வருகின்றீர், என் வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்! உயிர்மூச்சின் சுவாச ராகங்களை ''முயற்சிப்போம்'' கவிதையில் மீட்டுப்பார்க்கிறேன். ''கருகிப்போன கிருசாந்திக்காய்'' தனில், கனல் பறக்கும் கண்டனக் குரலைச் செவிமடுத்தேன். மலரவிருக்கும் தமிழ் ஈழத்திற்கு ''வணங்குகிறேன் தாயே'' என்று கட்டியம் கூறிவைத்தீரே, அபாரம்! உம் எழுகோலைக் காயவிடாது, புதுக்கவிதைத் தொகுப்பொன்றைத் தொடுக்க விழைகிறீர், என் முதல் வாழ்த்துக்கள்!

நம் ஈழத்தின் மைந்தர்கள் எதிலும் சளைத்தவர்கள் அல்ல! சோகத்தின் விளிம்பிலும், சோதனைகளின் மத்தியிலும், மண்ணின் மகிமைகளை பறைசாற்றத் தவறுவதில்லை. கதையா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியமா, கவிதைகளா? பரதமா, நாட்டுக்கூத்தா, இசைவடிவமா, இல்லை, இலக்கிய ஆக்கங்களா? மேடை நாடகங்களா, வானொலிப் படைப்புக்களா, அத்தனைக்கும் கட்டியம் கூறும் நம் தமிழர் வரலாறு, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை! இது காலத்தின் கட்டளையும், கட்டாயமும் கூட!

நமது ஈழத்து சோக வரலாறுகள், மண்மீட்கும் எமது வீர வேங்கைகளின் தியாகங்கள், வீரக்காவியங்கள், விடியலை நோக்கிய எமது பயணங்கள், அத்தனையும் எமது எதிர்காலச் சந்ததியினரின் நினைவலைகளில் ரீங்கார மிட்டால்தான், ஈழத் தமிழன் புகழ், போற்றிப்பாதுகாக்கப்படும்.

இளம் கவிஞரே! உமது எழுதுகோலைத் தொடர்ந்து ஈரப்படுத்திக் கொள்ளுங்கள். காலங்கள் வாழ்த்தும் காவியக் கலைஞராய் வளர மீண்டும் என் ஆசிகள்! நல்வாழ்த்துக்கள்!!

**"வளம் காணும் தமிழில் நூறு, வகையான கவிதையாக்கி**
**களம் காணும் நடை வடித்து, கற்கண்டாய் சுவைக்க வைத்து,**
**தேமதுரத் தமிழோசை, உலகமெல்லாம் பரவும் வண்ணம்,**
**ஞானக்குமாரன் வரவு, வாழிய பன்னூறாண்டே!!!**

அன்புடன்

"முகத்தான்" ***எஸ். ஜேசுரட்ணம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இன்று ஈழத்தமிழர்கள், சிறீலங்கா அரசின் கொடுமைகளின் விளைவாக, உலகின் பல பகுதிகளில் புலம்பெயர்ந்த மக்களாக வாழத் துடிக்கின்றனர். அந்நிய நாடுகளிலே தஞ்சங்கோரிய தமிழர்கள் புதிய சூழலிலே பயங்கரமான விரட்டல்களையும், பகைமையான எதிர்ப்புகளையும், தொடர்ச்சியான பதட்டங்களையும், தமிழ் பண்பாட்டு வாழ்விற்கு முரணான பல சவால்களையும் நாளாந்தம் சந்திக்கின்றனர். உயிர் தப்புவதற்கும் உடலை வளர்ப்பதற்கும் போதிய உணவும் உறைவிடமும் இருந்தாலும், தமிழர் தமிழராக பயமின்றி சுதந்திரமாக மனித மாண்புடன் வாழ்வதற்கும் வளருவதற்கும், அதற்கும்மேலாக தம் உடன்பிறந்தவர்களுடன் பின்னிப் பிணைந்து ஒரே இனமாக வாழ்வதற்கும் வளருவதற்கும் இயலாத வகையில், தமிழ் மொழி, கலை, கலாச்சார பழக்கவழக்கங்களின்றி வாழவேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தமிழ் தாகத்தில் தவிக்கின்றனர்.

இவர்களுடைய விடுதலைப் பயண தாகத்திலும் துடிப்பிலும் பின்னிப் பிணைந்து, துணைகொடுக்க வருகின்றவர்களில் ஒருவர் மட்டுவில் ஞானகுமாரன். தமக்கு இறைவன் கொடுத்த சிந்தனை, கற்பனை, எழுத்து வன்மை இவைகளைக்கொண்டு புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமும் உந்து சக்தியும் ஊட்டி வாழ்வளிக்கின்றதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

அந்நிய சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கு குடும்ப சமூக சந்திப்புகள், கலை கலாச்சார வைபவங்கள், கோயில் திருவிழாக்கள், சிந்தனையூட்டும் பாடல்கள் கதைகள் கவிதைகள் - இவைகள் எல்லாம் இன்றியமையாத உந்து சக்திகள். அவைகளில் ஞானகுமாரனின் எளிதான நடையில் அரிதான கருத்துக்களை வெளிக்கொணரும் கவிதைகள், இன்றைய போராட்ட சூழலில் எமது சகோதரர் படும் துன்பங்களை உணர்வுடன் பகிர்ந்து எம்மையும் தாயக மக்களுடன் இணைந்து விடுதலைப் பயணத்தில் பங்கெடுக்க வழிவகுக்கின்றது.

இதற்கு எமது பாராட்டுகள்.

இவரின் சேவை வளர்க என வாழ்த்தும்,

பணியாளன் ***எஸ்.ஜே. இம்மானுவேல்.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இன்று தமிழினத்திற்கு ஒரு முக்கிய பொறுப்பு உண்டு. அது என்னவென்றால் திட்டமிட்ட ஒரு இனமொழி அழிப்பிலிருந்து தமிழ் மொழியைக் காப்பதுதான் உலகத் தமிழினத்தின் வரலாற்றுக் கடமை. நாம் ஏனைய மொழிகளுக்கு எதிரிகள் அல்ல. ஒரு தாய் பல கொலைவெறிபிடித்த மனித மிருகங்களால் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, மகன் வேடிக்கை பார்த்து கைகளைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கமாட்டான்.

அதுபோலத்தான் எங்கள் தமிழ்த்தாய் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது நாம் கண்களை இறுகமூடிக்கொண்டு இருந்தால் நாம் தமிழர்களே இல்லை. வெறும் சதையும் எலும்பும் உள்ள மனித பிணமே ஆகும். அண்மையில் ஆடிமாத விழித்தெழு ஏட்டில் ஒரு செய்தியைப் படித்தேன். என் மனமே அழுதது! அந்தச் செய்தி இதுதான். 1983 முதற்கொண்டு இலங்கையில் நடைபெற்றுவரும் போரில் 60,000 பேர் உயிர்பிரிந்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆயிரம் எங்கள் குலக்கொழுந்துகளை அழிக்க சிங்கள வெறியர்கள் காத்திருக்கிறார்களோ தெரியவில்லை. புலம்பெயர்ந்த தமிழ்ச் சமுதாயம் இதை உணர வேண்டும் என்ற தமிழனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நிலையை எடுத்துச்சொல்லி தமிழனைத் தமிழனாக வாழ புலம் பெயர்ந்த நாட்டில் ஒரு வீச்சு வாளாகத் தம்பி மட்டுவில் ஞானகுமாரனைக் காண்கின்றேன். அவர் வரைந்த கவிதைகளில் என்னை மிகவும் பாதித்தது தேன் சொட்டும் தமிழிலே சுவை இல்லையா? கவிதைத் தலைப்பில் வரும் வரிகள்.

*வருவோன் போவோன் எலாம் தமிழைச் சீரழிக்கின்றான்*
*நீயோ பார்த்துக்கொண்டு சும்மா நிற்கின்றாய்...*
*சிகரத்தில் பறந்த தமிழன் கொடி*
*நகரத்தில் மூலையில் ஏனோ காணவில்லை*
*சாந்தி தேடிச் சாமியிடம் போனேன்*
*சாமியார் ஏதோ சமஸ்கிருதத்தில் சொல்ல*
*புரியாது புரியாது விழித்தேன்*

மேலும் இன்றைய தமிழர் நிலையைக் கூறும்போது மிக அழகாக புலம்பெயர் தமிழர்களைக் கணக்கிட்டு இருக்கின்றார் என்பது எனது கருத்து.

*எலிசபெத்துக்கு கணக்கு கற்றுக்கொடுத்தவன்*
*தமிழாசிரியன் - நீயோ!*
*எலிசா எனப்பெயரிட்டு கணக்கு விடுக்கிறாய் எனக்கு*

என்று மிக அழகாக வரைந்திருக்கிறார். அத்தோடு தனது ஆதங்கத்தை நிறுத்தவில்லை. இன்றைய தமிழர் நிலை இதுவன்றோ -

*விடிய விடிய தமிழ் ஆராய்ச்சி மாநாடாம்*
*சிங்கள மொழியிலே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படித்தான் சொன்னாலும் தமிழன் காதுகள் இன்னும் கேட்டும் கேட்காததுபோல் இருக்கின்றார்கள் எனக் கவிமுழக்கம் செய்கின்றார்.

இந்த *முகம் அறியா வீரர்களுக்காக* எனும் கவித்தொகுப்பு வெறும் கவிதை அல்ல, எம் இனத்தின் வரலாற்றுப்பெட்டகம். புலம் பெயர்ந்த நாட்டில் எழுதுவது என்பது மிகச் சுலபமான விடயமல்ல. ஆழியிலே முத்து எடுப்பதற்குச் சமம். எமது தமிழினத்திற்கு ஆதாரமாக இருப்பது தமிழ் நூல்கள்தான். எனவே எமது தமிழ் விடுதலைக்கு உரம் சேர்க்கும் ஒரு நூலாகவும், எமது இனத்தை வாழ வைத்துக்கொண்டிருக்கும் மாவீர வேங்கைகளுக்கும் எம் தங்கத் தலைவன் பிரபாகரனின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் நூலாகவும் இந்த *முகம் அறியா வீரர்களுக்காக* இருக்கும் என்பது திண்ணம்.

மட்டுவில் ஞானகுமாரன் இன்னும் பல பயன் உள்ள நூல்களைப் படைக்க வேண்டும். அதிலே தமிழ்த்தாயின் புன்னகை தெரியவேண்டும் என மனதார அவரை வாழ்த்துவதில் ஈழம் பத்திரிகை பெருமிதம் கொள்கிறது.

தமிழன்புடன்,

ஈழம்பத்திரிகை பிரதம நிர்வாக ஆசிரியர்,

***சின்னதுரை இராசகருணா*** (ஈழமுருகதாசன்)

ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சோகங்களில் பெரிய சோகம் உறவினர் நண்பர்களை விட்டுப் பிரிவதல்ல.

சொந்த மண்ணை விட்டுப்பிரிவதுதான். சொந்த மண்ணைவிட்டுப் பிரிந்த எங்கள் சொந்தங்கள், இரத்தத்தின் இரத்தங்கள், புலம் பெயர்ந்த நாடுகளிலே தரமான பல இலக்கியப் படைப்புகளை வெளிக்கொணர்வதில் தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

இந்த வகையில், சமகால சம்பவங்களின் தாக்கங்களைப் பிரதிபலிக்கும் தம்பி ஞானகுமாரனின் இந்தக் கவிதைத் தொகுப்பில் சொற்சுருக்கமாக நறுக்குத் தெறித்தாற்போல மிகவும் ஆழமான அற்புதமான கவிதை வடிவங்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்.


தம்பி, ஞானகுமாரனின் இலக்கியப் பணி தொடர அன்பான வாழ்த்துக்கள்.

***ரெட்ணா காத்தலிங்கம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமறியா வீரர்களுக்காக



இராப்பிச்சை எடுத்து
இரவல் கனவில் வலம்வரும்
ரத்வத்தைக்கு!
கொடியேற்றிய களிப்பிலும்
களைப்பிலும் மிதக்கும் நாயகன் நீ...
வெடியோசை உன்
கண்களை விழிக்க வைத்திருக்கும்
என நம்புகிறோம்.

வானம் ஏறிப் பகை தொடங்கினாய்...
காற்றுக்கும் சிறையிட்டாய்
மண்ணின் மேனியெங்கும்
அன்னியன் அடிச் சுவடுகள்...
கோரப்பற்களால் குதறிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிரங்கள் ஆறாய் எங்கும் ஓடிய
காலம் போய்
தலைநகரிலே உன்
தலைக்கு
உலைவைக்க வந்துவிட்டோம்!
எங்கள் உடல்களைக்
கிழித்தும்
சின்னப் பெண்களைக்
கூட்டாகப் பங்கிட்டதும்
நேற்றோடு நீ
மறந்திருக்கலாம்...

நாம் இன்றும்
துயரத்தில் துடிக்கிறோம்...
காற்றிலும் வெடிகளை விதைக்கும்
எங்கள் வீரர்கள்
கூற்றுவனாய் உனைத்தேடி வருவார்கள்
வேற்றுக் கிரகத்தில் நீ ஒழிந்தாலும்
விட்டுவிடப் போவதில்லை.

வெடிகுண்டேந்திய வீரர்கள்
கொழும்பு வீதியெங்கும்
வலம் வந்த செய்திகேட்டு
சிலிர்த்தோம்!
துடிப்படங்கிப் போகும்வரை
எழுச்சிச்சமர் செய்த ஒலி
எங்கும் கேட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன் படை இனி
எங்கும் வரும்
எதிலும் வரும்...

தூங்கும் தமிழனைத்
தட்டி எழுப்பிடும்
சங்கொலி கேட்டது...!

தட்டியெழுப்பிய வீரர்களே
கொழும்பில் கேட்ட வெடியோசை
அன்றொருநாள்
எமக்குத் தந்த அவலத்தின்
பதிலாக அமைந்தது...!
இனியும் அமையும்!!

(13.02.2000 இல் கொழும்பில் நடந்த அதிரடித் தாக்குதலில்
பலியான சகோதரர்களின் நினைவாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூறாவளிக்கு ஓய்வேது!

சுற்றி அடித்த சூறாவளியிலே
சிதறிப்போன
சிங்கள வீரர்களே!
வெற்றிநிச்சயம் என்று
எதைச்சொல்ல?
எத்தனை சொல்ல?
கட்டிய துணியுடன்
கானகம் விரட்டினான்....
ஒட்டிய வயிற்றுடன்
ஒரு நேரக்கஞ்சியும் இல்லாமல்
வாழ்ந்தோம்.
புயலுக்கு அகப்பட்ட
துரும்புபோல
உறவுகளைப் பிரிந்து
திசைமாறி முகவரி இழந்து
வாழச் செய்த சீமாட்டியே!

ஆண்ட பரம்பரையை நீ
சீண்டிப் பார்த்தாய்...
உன்
காலைக் கும்பிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தரும்
கூழைக் குடித்து வாழ்பவனா?
தமிழன் இனம்
அடுப்படிக்குள் குந்தி இருந்து
சுடும் நெருப்போடு வாழ்பவளா தமிழச்சி?

வன்னிநிலத்தில் நீ
கால்வைத்த போதே
எண்ணிப் பார்த்திருக்க மாட்டாய்
'உனக்கு கழுத்தில் சுருக்கென்று!
எம் பிஞ்சுப்பாலகரை
நெஞ்சைப் பிழியும் பசித்தீயில் வாட்டியபோதே
தலைவன் போட்ட திட்டமிது
அலைகள் போல் பாய்கிறார்கள்

ஆனையிறவு என்ன
பலாலி வரை உன்னை விரட்டிவிட்டே
எங்கள் குஞ்சுகள் ஓய்வெடுக்கும்
அதுவரை
சூறாவளிக்கு ஓய்வேது?

(22.4.2000 அன்று ஆனையிறவுத்தளம்
வீழ்ந்ததற்காய் வானலையில் வாசிக்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் வெளுக்கிறது....

நரிய் அலறும் சத்தம்
நெஞ்சைத் திகிலாக்கும்
தூரத்தில் வேட்டொலி கேட்கும்!

அதிகாலை என்றாலும்
நெஞ்சம் சுடும்
இராணுவ இரைச்சல்
எம் உயிரைப் பதறவைக்கும்
மனதுக்குப்பட்டது
எந்த நகரமோ நரகமாகுமென்று...

தொழிலுக்குப் போவதில்லை
நேரக்கெடுபிடி
மீன்பிடிக்கத்தடை போட்டு.
கஞ்சியில் மண்விழும்!

இரவுத் தொழில் இல்லாமல் போனது
பகல்வலையில்
மீன்கள் படுவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையான சங்கதி இது.
வழமைக்கு மாறாக இன்று
காகங்கள் கரையுதே!
யாரோ வருவார் என
ஆருடம் கூறினாள் மனைவி

படலைச் சத்தம் காதில் கேட்டது.
எட்டிப் பார்த்தேன்
கண்ணில் ஒளியுடன்
தோளில் பையுடன் கிழிந்த
சாரத்துடன்
இளைஞன் சிரித்தான்!
என்னவென்றேன்.

தாகம் கொஞ்சம் தண்ணி என்றான்
காட்டில் அலைந்திருப்பான் போல்
களைப்பாய் இருந்தான்!
உள்ளே அழைத்தேன்
உணவு கொடுப்பதற்கு
இளைப்பாற நேரம் இதுவல்ல என்றான்!

செம்பு தண்ணியை
ஒரு முடக்கில் குடித்தான்.
வெறுமனே வழியனுப்ப
மனம் மறுத்தது!
கையிலே பழமொன்றைக்
கொடுத்தேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி சொன்னான்...
அவன் போய்விட்டான்
இன்னும் மறைய மறுத்தது
அவன் முகம்...
திடீரென ஒரு இடிச்சத்தம்
ஒன்றுமட்டும் புரிந்தது.
நல்ல சாத்தொன்று
நடந்திருக்க வேணுமென்று
இன்னும் அவன்முகம்
நெஞ்சிலே தோன்றி!
பெரிதாகி பெரிதாகி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை வேண்டாம் வாழ ஒருவழி தருவாய்!

மரண தண்டனைக்கு
முழுஉலகே வைக்க நினைக்கிறது
முற்றுப்புள்ளி....
தூக்குத்தான் வேண்டுமென
நிற்கின்றனர் சிலர்
ஒற்றைக்காலில்
தூக்குத்தான் தண்டனையேல்
மனித இனம் மாண்டுவிடும்
பூண்டோடு!

தூக்குத்தான் முடிவெனில்
தூக்குங்கள் முதலில் அக்கொடியவரை
ஓடும் வண்டியில்
மூன்று உயிர்களை எரியூட்டிய
கொலை வெறியரைத் தூக்குங்கள்!

ஈழத்தமிழனை
இரும்புத்தூங்கியால்
அரைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கமில்லா அமைதிப்படை
தொங்கட்டும்!

அமைதிப் போர்வையுள்
வஞ்சவலை பின்னி வந்து
பிஞ்சுகளைக் கொன்ற
வஞ்சகரைத் தூக்குங்கள்!

பத்துவயதுப் பாலகியை
வல்லுறவு கொண்ட
வல்லூறுகளைத் தூக்குங்கள்!

தேவாலயத்தில்
அடைக்கலம் தேடிய உடல்களை
கருக்கிக் கொன்ற
கயவரைத் தூக்குங்கள்!

வெலிக்கடை சிறையிலே
வெறுங்கரங்களோடு இருந்த
எங்கள் தோழரின்
கண்களைத் தோண்டிய
பாம்புகளைத் தூக்குங்கள்!

கறுத்துறையிலே
தமிழன் தலைகளை
அறுத்த
சிங்களக் காடயரைத் தூக்குங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இந்தத் தண்டனை
தமிழை வாய்நிறைய உச்சரித்த
பாவமோ?
எதிரியாய் ஓடிவந்த
ஈழத் தமிழனின்
பசிதீர்த்த குற்றமோ
தொண்டையில் காத்து நிற்கும்
கயிறு

ஈன்ற
ஓரேமகனை மீட்க வழியின்றி
பற்றி எரியும்
பாலூட்டிய தாய்
வயிறு!...

பசித்தவன் வாடினால்
உலகையே அழிக்கச் சொன்னான்
பாரதி!
பசித்தீயில்
தமிழனைவாட்டிக் கொல்லும்
ஆரியனை
யார் அழிப்பார்?

தமிழ்காத்த தனயனுக்கோ
கொலைப்பட்டம்!
சிங்களர்க்கு
விலைபோகும் துரோகிக்கோ
முனைவர் பட்டம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுக்குத் தண்டனை சரிதான்
தண்டனை திருந்திடவழிதான்
தூக்கிலே தொங்கினால்
திருந்துவது எப்படி?

நீங்கள்
மனுச்சோழனின் பரம்பரைதான்
அதற்காய்
தேர்ச்சில்லுக்கேன் தூக்கு மேடை?

அப்பாவிக்கேன்
தப்பான தண்டனை?
தூக்குக் கயிற்றைத் தூக்கிப்போடு
திருந்திவாழ
ஒரு வழி கொடுங்கள்!
மீள ஒரு இடம் கொடுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமறியா வீருக்கு எம் சிரம் தாழ்த்திய வணக்கங்கள்!

இராப்பிச்சை எடுத்து
இரவில் கனவில் வலம்வரும்
ரத்வத்தைக்கு!
கொடியேற்றிய களிப்பிலும்
களைப்பிலும் மிதக்கும் நாயகன் நீ...
வெடியோசை உன்
கண்களை விழிக்க வைத்திருக்கும்
என நம்புகிறோம்...!

வானம் ஏறிப் பகை தொடங்கினாய்...
காற்றுக்கும் சிறையிட்டாய்?
மண்ணின் மேனியெங்கும்
அன்னியன் அடிச்சுவடுகள் பதிந்தன.
கோரப்பற்களால் குதறிட
உதிரங்கள் ஆறாய் எங்கும் ஓடிய
காலம் போய்
தலைநகரிலே உன்
தலைக்கு
உலை வைக்க வந்துவிட்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் உடல்களைக்
கிழித்ததும்
சின்னப் பெண்களைக்
கூட்டாகப் பங்கிட்டதும்
நேற்றோடு நீ
மறந்திருக்கலாம்...

நாம் இன்றும்
துயரத்தில் துடிக்கிறோம்...
காற்றிலும் வெடிகளை விதைக்கும்
எங்கள் வீரர்கள்
கூற்றுவனாய் உனைத்தேடி வருவார்கள்
வேற்றுக்கிரகத்தில் நீ ஒளிந்தாலும்
விட்டுவிடப் போவதில்லை.

வெடிகுண்டேந்திய வீரர்கள்
கொழும்பு வீதியெங்கும்
வலம் வந்த செய்தி கேட்டு
சிலிர்த்தோம்!
துடிப்படங்கிப் போகும்வரை
எதிர்ச்சமர் செய்த ஒலி
எங்கும் கேட்டது
தமிழன் படை இனி
எங்கும் வரும்
எதிலும் வரும்
என்ற நிலையாகிப் போச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கும் தமிழனைத்
தட்டி எழுப்பிடும்
சங்கொலி கேட்டது!
தட்டி எழுப்பிய வீரர்களே
கொழும்பில் கேட்ட வெடியோசை
அன்றொருநாள்
எமக்குத் தந்த அவலத்தின்
பதிலாக அமைந்தது....!

வெறிகொண்ட சிங்களத்தின்
பொறிகலங்க அடித்த
புலிவீரனே!
நேற்று நீ
காற்றில் கரைந்து விட்டாய்
என்றும் நீ
எம் நெஞ்சிலிருப்பாய்....

(13.3.2000 இல் கொழும்பில் நடந்த அதிரடித் தாக்குதலில் பலியான போராளிகள் நினைவாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணங்குகிறேன் தாயே!

இருள் சூழ்ந்த தேசத்தில்
விடிவுக்காய் காத்திருந்தோம்
இன்றுவரை
இன்னும் இல்லை?
இன்றுடன் நீ மறைந்து
பத்தாண்டு காலம் பறந்தோடிவிட்டது!
நம்ப முடியவில்லை.
நம்பித்தான் ஆகவேண்டும்!
நிழலாக எம் நெஞ்சில்
நிலைத்து நின்றுவிட்டாய்.
நண்பன்போல் நடித்தவன்
மண்ணை இரத்தத்தில்
நனைத்திட்டான்!

பொய் முகம் கிழிந்து
உண்மையை உணர்ந்திட நாம்
பெரியவிலை கொடுத்துவிட்டோம்
உண்ணா நோன்பிருந்து
உன்னை உருக்கினாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்மானம் காத்து
எம் மனத்தில் பதிந்தபின்
எங்கோ சென்றுவிட்டாய்!

நீ நடந்த பாதையில்
நாள்தோறும்
உன் வரவுக்காய் நாம்
காத்துக்கிடக்கிறோம்
அதர்மம் வாழ்ந்ததாய்
வரலாறு இல்லை.

தர்மம் அழிந்ததாய்
சரித்திரம் இல்லையே?
வந்தவர் வல்லரசென்றால்
வாய்மூடி நிற்பதா?

ஆயுதம் கொண்டெமை
அடக்க நினைத்தால்
பூவையரும் பூகம்பமாவார் என
பாருக்கு முரசறைந்தாய்!
உறுதிக்கு இரும்பாய் இருப்பினும்
அன்புக்கு அடிமையானவள்
என் அன்னை பூபதி தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் உள்ளம் கொண்டே
தமிழ் சேய்களைக் காத்தாய்.
உன் புகழ்பாட
வார்த்தையற்ற வறுமையை
உணர்கிறேன்!

என்னை ஆசீர்வதி தாயே...
உன்பணி தொடர்ந்திட
உன் பாதத்தில் இன்று
உறுதி எடுக்கிறேன்!
மண்ணை மீட்கிறேன்
இன்றேல்
மடிந்து வீழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகிப்போன கிருசாந்திக்காய்!

இரவின் நிசப்தங்கள்
சில்வண்டின் இரைச்சல்கள்!
வாடைக்காற்றின் மோதலால்
மேடைபோட்டுப் பாடும் மூங்கில்கள்...
எதுவும் இப்போ கேட்பதில்லை
பாடசாலை போனபிஞ்சை
சிறகொடித்துப் பாடச்சொன்னான்
பாட்டு முடிந்த பின்னே
வேட்டை ஆடிவிட்டான்
கூட்டாகப் பத்துப்பேர்
செத்துமடியும் வரை....

நெஞ்சு பதறுகிறது
அஞ்சு கெட்டு மயக்கம் வருகிறது
உருத்தெரியாமல் போகும் என் இனத்திற்கு
மருத்துவச்சியாய் வந்து உதவ நினைத்தவள்
வேலை முடிந்தபின்னர்
விசயம் வெளியே கசியுமென்று
மண்வெட்டியால் அடித்துக் கொன்றனர்
பள்ளிக்குப் போனபிள்ளை
கள்ளிப்பற்றையில் காணாமல் போனதாம்
கண்கொத்திப் பாம்புகளின் புதுக்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபோட்டவனில் ஒருவன்
தங்குதடையின்றி ஒப்புவிக்கிறான்
ஒன்றா இரண்டா
தோண்டத் தோண்ட வெளிவரும்
வெற்றுடல்கள்...
காட்டுவாசிக்கும் உறவுமுறை இருக்கும்
நாட்டுக்குள் திரியும் பேய்க்கேது
உறவுமுறை...?
ஆரியக்கலப்பு செய்த
அருவருப்பு வேலை இது
தங்கை கிருசாந்தியே சினக்காதே.
மங்கை உந்தன் நிலைகண்டு
பழிதீர்க்கப் புறப்பட்டு போகிறது
தமிழ்ப்படை
விரைவில் உன் கல்லறையில்
அவன் சிரசைக் காணிக்கை ஆக்குகிறோம்..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக் கதவுகள் சிதறட்டும்!

செல்லரித்துச் சிதைபடும்
மானிடர் வரிசையில் தமிழினம்
சூழ்ச்சிக்குப் பலியானவர் தொடரில்
இன்னும் நால்வரா?
சுவாசிக்கும் காற்றுக்கும்
சிறையா?
சுட்டெரிக்கும் சூரியப் புதல்வரை
அனல் கொண்டெரிக்கக் கூடுமோ?
வெடித்துச் சிதறும்
எரிமலைக்கு வரையறை போடுவரோ?
அன்னத்தின் உயிர் காத்த
புத்தனின் தாய்நாடே!
சிறைக் கூடமதை
அறக்கூட மாக்கியவரே
கோயிலில் உயிர்ப்பலி கொடுத்தால்
பாவமென்பவரே
வாழ நினைத்த மனித உயிரை
அழித்து விடுவதா?
பச்சைப் பாலகனை
அநாதை ஆக்கவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தர்மச் சக்கரம்?
உயிர்ப்பிச்சை கேட்டு
அலைகடல் தாண்டிவந்தோரின்
உயிரையே எடுப்பதா?
பிச்சை கேட்டோம், இல்லையென்றான்
நாயை ஏவியதேன்?
மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பரா?

அடைக்கலம் தேடிவந்தோம்
நீ உயிருக்கே விடை கொடுத்தனுப்புகிறாய்
கண் முன்னே
கொலைக்களம் தெரிகிறது
விழி அருகில்
உயிர் போக்கும் கயிறு
துகில் உரிய
துட்சாதனன் தயாராகையில்
துகில் கொள்ள இது நேரமோ?
அநியாயம் ஒன்று
அரங்கேற நாள்பார்க்கிறது.
தவறறியா மானிடம்
தண்டனை பெறுவதா?
அனுமதியோம்! அனுமதியோம்!

வீழ்ந்தது நானென்றாலும்
என் வீழ்ச்சியில்
தமிழன் எழுச்சி அடையட்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்வது நானென்றாலும்
வெல்வது தமிழனாக இருக்கட்டும்
பெண்களும் படைதாங்கி
போருக்குப் போகையில்
புறநானூறு விஞ்சி
புது நானூறை படைக்க வா தமிழ்மகனே!
சாவின் நாட்களை எண்ணுகையில்
சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பதா?

புது நூற்றாண்டை வரவேற்க
ஆர்ப்பரிக்கும் உலகமே!
பாழும் சிறையிலே வாடும் உயிர்களை
ஏனென்று கேளாயோ?
வெடித்தெழு தமிழ் மகனே!
துடிக்கிறான் தமிழன் சிறைதனிலே!
ஒரு பெரும் வெடிப் புகையலுக்கு
சிறு பொறி போதுமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கவிகள்

## எழுச்சி மாநாடு

விடிய விடிய
தமிழராட்சி
சிங்கள மொழியிலே!

## போராளி

செங்கடலில்
மூழ்கி
முத்தெடுக்கத் துடிக்கும்
சுழியோடி!

## பொருளாதாரம்

பட்டுவேட்டியில்
அரசியல்வாதியின் சிலை
அருகிலே
அம்மணமாய் ஏழைச் சிறுவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்

கடலையும்
கண்ணையும் சேர்த்தே
தொடுத்தது யார்?

## வாக்கு

ஏழையின்
சேரி நாடி
வண்டு வரும் தேன்கூடு!

## பிரசவம்

சிறை உடைப்பு
இரத்த சகதியில்
குழந்தையின்
ஆனந்தக் கண்ணீர்...

## அடையாள அட்டை

தமிழனை
வடித்து எடுத்து
சிறையடைக்க உதவும்
அடிமை சாசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர தினவிழா

பட்டுப் பீதாம்பர
வரவேற்பு
அரசியல்வாதிக்கு
போராடிய வீரனுக்கு
பிச்சைப் பாத்திரம்.

## பணிவு

தலை
குனிந்து நடந்தாள்
ஐரோப்பியத் தமிழ்ப்பெண்
கழுத்திலே ஐம்பது பவுன் தாலி!

## மோட்சம்

தாய்
ஊரில் பட்டினி
நேர்த்திக்கடனுக்காய்
மகன்
இந்தியா போகிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள் வாழ்பவளே!

நண்பா
உனக்காக ஓர்வரி
கவிபாட வருகின்றேன்
இருண்ட வாழ்க்கையில் - நீ
ஒளியூட்டிய ஓர் திரி....

வாழ்க்கையினைத் தொலைத்து
வறுமையில் வாடினேன்
வீழ்ந்த எனைத்
தோள் கொடுத்து நிமிர்த்தினாய்...

என் வசந்தத்தை இழந்து
வெகுதூரம் சென்றவனை
அன்பெனும் மழையிலே
அன்றாடம் நனையவிட்டாய்...!

பாறைக்குள்
நீரை நீ தேடினாய்...
இரும்பான என் உணர்வைக்
கரும்பின் சாறாக மாற்றினாய்
என் உடலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைப் பிரித்தாலும்
உன் நேசத்தை
யாருண்டு சரிக்க?

நீ என் இதயத் துடிப்பு!
கங்கையைப் பிரசவித்த
பாறையின் வெடிப்பு!

உன்னையும் நட்பையும்
யார்தான் வெல்வார்
நட்பென்றால் நீ என்று
எப்போது நான் சொல்வேன்...

பணம் தேடும் இவ்வுலகில்
குணம் தேடி வந்தாய்
இலவம் விதையில்
இலாபம் இல்லாதிலும்
வாடிக் கிடந்த எனை
தேடிச் சொந்தம் கொண்டாய்....

நான் படித்த இலக்கியத்தில்
தோழனுக்காய் உயிர்நீத்த கர்ணனும்
இராமனின் நட்புக்காய்
உயிர் கொடுத்த குகனும்
உயர்வாகத் தோன்றினார்கள்

இன்று நீ
இலக்கியத்தை விஞ்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பென்றால் என்னவென்று
இலக்கணம் வகுத்து
உலகிற்குக் கூறிவிட்டாய்

பாதை மாறி நான்
போன வேளை
கீதை போல
புத்தி சொன்னாய்...

பலருக்குக் கிடையாத
பெரும் புதையலாம்
நட்பெனும் ஒன்றதைத்
தொட்டுக் காட்டிய
ஆண்டவனுக்கு
எப்போதும் நன்றிசொல்வேன்

நீலவானம் எவ்வளவு
நீளமானதோ
அலைகடல் எவ்வளவு
ஆழமானதோ
என் நட்பும் அப்படியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியில்லை

சிறகிழந்த
பறவை ஒன்று
மேலெழ பார்க்கையில்...
வேடரின் கையிலே
பதம்பார்க்கும் ஆயுதங்கள்!

மறுபுறம்
வேட்டைக்காய் அலையும்
கோரப்பல் நாய்கள்!
மாமிச வேட்கையால்
வட்டமிடும்
கழுகுகளும்...
மரணத்தின் வாசலில்
அழகிய குயில்!
அமிர்த கானம்
பாடும் வாயிலே
அபயக்குரல் ஓசை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக்கரம்...
இன்னும் நீளமில்லை எனின்?
குற்றுயிர் பறவையின்
உயிர்நிலை?

வன்னி மண்ணில்
என் மக்கள்
பறவையின் நிலையிலே!
ஈழத்தமிழன் சாவின் மடியிலே
என்ன செய்வது சொல் மனமே...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்றுகள்

தாயகக் கனவினைத்
தாங்கிய
தோழனே
மூடிய விழி திறந்து
மெல்ல நீ
எழுந்து பார்!
உனை எம்நெஞ்சில் நினைத்தே
களத்திலே தினம்
தொடுக்கிறோம் போர்!

உன்னோக்கம் நிறைவேற்றி
கொடி ஏற்ற
உயிரையே உரமாக்கி
உதிர்கின்றார்
வேங்கைகள் ஆயிரம்!

காடுகள்
மலைகள் எலாம்
கால்கள் நடக்கும்...
போகும் பாதை எலாம் முட்கள்
கிழிக்கும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் வந்தாலும்
சுடர் எரியும்
உறவை இழந்தாலும்
மண்
உணர்வை இழக்கமாட்டோம்...
விழுதாகி
வேதனை சுமந்தீர்...!
மெழுகாகி
வெளிச்சம் தந்தீர்...!

உங்கள் சமாதியை
சன்னதியாய்த் தொழுகிறோம்!
மலர்வைத்து
மனமுருகி அழுகிறோம்!

மலர்
நாளை வாடலாம்
நினைவுகள் அழியாது
கனவும் கலையாது
புலரும் காலையில்
தாயகம் மலரும்
அதுவரை
எம் சுடுகுடிலும் கனலும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குதான் வாழக்கூடும்!

உலகத்தின் மூலை வரை
ஓடினோம்
அடித்துத் துவைத்தனர் எங்களை
கேட்போர் யாருமின்றி
வாடினோம்!

பிஜித்தீவில்
கரும்புச் செடியோடு
தமிழனையும் சேர்த்தே
பிழிந்தார்கள்!

ஆபிரிக்காவிலோ
முகவரிமாறிய தமிழன் தோலினைக்
கிழித்தார்கள்
யாரும் ஏனென்றும் கேட்கவில்லை!

உகண்டாவிலே
உடுத்த உடுப்போடு
இடி அமீன் கூட்டம் தமிழனைத்
துரத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கிலோ
எம் பணிப் பெண்களை
இசுலாமிய எண்ணைக்கிணற்றின்
எசமானர்கள்
இச்சைக்குப் பணியவைத்தனர்!

ஐரோப்பாவிலோ
அகதி என்றொரு முத்திரை பதிய
காறி உமிழும்
நாசிக் கூட்டம்
நித்திரைப் பாயோடு இங்கே
எரிந்த உறவுகள் ஏராளம்!

இங்கிலாந்திலும்
கறுப்பென்று ஒரு
தரப்படுத்தல் எழும்
வீதியிலும்
தொடருந்திலும் பலர்பார்க்க
உதைகள் விழும்!

இந்தியத் திருநாட்டிலும்
மதராசி என
கேலிப் பெயர் ஏற்று
கேவலமாய் வாழும் இனம்.

கர்நாடகாவில்
காவிரி நீர் கேட்டால்
நிர்வாணமாக்கி விரட்டுகையில்
போய்விடும் தமிழன் மானம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழன் நாட்டிலோ
எங்களை
எரிக்கிறான் சிங்களவன்
உயிரோடு!
போகுமிடமின்றிச் சரிகிறான்
தமிழன் வேரோடு!

எந்த இனத்திற்கு
தனி அரசில்லை எமைத் தவிர

மத்தளமாய் இருக்கும்வரை
கைத்தாளம் போடும்
சிங்களம்
எரிமலையாய்ச் சீறிப்பார்
உன் காலடியில்
உலகம் வரும்!

மக்களைக் குளிப்பாட்டும்
குருதி!
ஓயும் வரை
வெள்ளைத்தாளை ஈரப்படுத்தும் என்
எழுது கருவி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போகின்றேன்

நான் போகின்றேன்!
மரணத்தைச் சுமந்து போகின்றேன்!
மக்களின் விடிவைச்
சுமந்து போகின்றேன்!
எதிரியின் முடிவுக்காய்
மலர்வுடன் போகின்றேன்...
தலைவனின் கனவிற்கு
உயிர்கொடுக்கப் போகின்றேன்...
அவன்
முகத்தை
நெஞ்சிலே சுமந்து போகின்றேன்...
ஈழம் மலரும் என
உறுதியுடன் போகின்றேன்...
எதிரி சிதறிடும்
குண்டுடன் போகின்றேன்!
என் அழிவிலும்
தமிழன் செழிப்பிருக்கும்..
நான்
சிரித்துக்கொண்டே போகின்றேன்...
கரும்புலியாகப் போகின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் சொட்டும் தமிழில் சுவை இல்லையோ!

வருவோன் போவான்
எல்லாம்
தமிழைச் சீரழிக்கிறான்
பார்த்துக் கொண்டு
நீ
சும்மா நிற்கிறாய்?
உருத்தந்த அன்னை அவமானப்படுகையில்
நீயோ
கண்ணை மூடிக்கனவு காண்கிறாய்...

சிகரத்தில் பறந்த
தமிழன் கொடி
நகரத்தின்
மூலையிலேனும் காணவில்லை!

சாந்திதேடி
சாமியிடம் போனேன்
சாமியார்
எதையோ சமஸ்கிருதத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல
புரியாது விழிக்கிறேன்!

முத்தமிழ் விழாவிலும்
சுத்தமாய் சொல்கிறான்
கலோ வண் டூ திறீயாம்
வாட்ட முகத்துடன் நான்
வீடு திரும்பினேன்
பேருந்து நிலையத்தில்
ஒருவன்
டயம் கேட்டான்.
தமிழனுக்கு நேரம் சரியில்லை
புலம்பினேன்
வந்த பேருந்தோ
பல்லவன் ரவல்ஸ் என
ஆங்கிலத்தில்
பல் இளித்தது!

வானொலியைப் போட்டேன்
ஓமரியா
லவ்லெட்டர் தாரியா என்ற
பாடல்பாடி
தமிழைத் தறித்தது....

தமிழ் வானொலியில்
ஆங்கில விளம்பரம்
தலைசுற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன்
நிலை எண்ணுகையில்
தமிழுக்கும் சமதகுதியாம்
வந்த சுற்று நிருபமோ
சிங்களத்தில்!

அழகுதமிழ்
கிழமாகிப் போனதாலா
மாற்று மொழி
பேசுகிறாய்?
வளத்தமிழ்
பழசாகிப் போனதாலா
வேற்றுமொழி பேசுகிறாய்?

அன்னைக்கு வயதானால்
சின்னம்மா முறையோ
வேடிக்கை தமிழா!

கொள்ளையர்போல்
புகுந்தவர்கள்
போத்துக்கேய வெள்ளையர்கள்
அலைபாயும்
தமிழன் உடல்
அன்னிய மொழி பேசியது

சதிவலையில்
சிக்கிய
அகலிகை உடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னிய மொழிபேச
கல்லாக்கினர் முன்னொருநாள்

வேண்டுமெனத்
தமிழினைச் சீரழிக்கும் புதல்வர்களை
எரிதணலில்
இடுபவர் யார்?

ஆங்கிலக் கல்லூரி வாசலில்
அலைமோதும்
கூட்டம்
முகம் தேயும்
தமிழ்ப் பள்ளிகள்!

எலிசபத்துக்கே
கணக்குக் கற்றுக் கொடுத்தவன்
தமிழ் ஆசிரியன்
நீயோ
எலிசா எனப்பெயரிட்டு
கணக்குவிடுகிறாய்
எமக்கு...

தேன்
சொட்டும் சர்க்கரைப் பொங்கல்
சுவை இழந்ததோ
மில்க் ரைசுக்கு
மாறினாய்...
மேற்குலகால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை என்றுதானே
கணனிவித்தையில்
நம் தமிழனைக்
கடன் கேட்கிறான்
ஐரோப்பியன்

வானுயர்ந்த கோபுரமும்
கந்தனாய்க் குளமும்
எவன் சொல்லிக்
கட்டினோம்

எங்களிடம் என்ன இல்லை
ஏன் எமக்குள்
தாழ்வு?

மலேசியத் தமிழனோ
மணி அரசன் எனப்பெயர் வைத்தான்
நாமோ
மார்க்கோஸ்
விவியா என
வாயில் வருவதை எலாம்
வைக்கிறோம் பெயராய்

இங்கு
சத்தியவான்
ஒனோஸ் ராஜ்ஆக
மல்லிகா
ஜஸ்மீனாய் மாறினாள்..?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவல் பெயரிட்டால்
இங்கிலாந்து உனக்கு
முடிசூட்டுமா?
புதுப் பெயர் போட்டு
புதிர்
போடும் வீரர்களே
சாதிக்க
பெயரில் என்னவுண்டு
வரலாறு உனை வாழ்த்தும்
நல்ல தமிழ்ப் பெயரைச்சூட்டி
தமிழன் எனக் காட்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ வீரனே

நான் எங்கே?
இதற்கு மேலும் தெரியவில்லை!
இரவின் மடியில் முகிலின் செம்மை
குழந்தை சாகும் ஆனால் குருதி
காயவில்லை!

இங்கு வளமாக்க தேவையில்லை!
இறந்த உடல்கள் போதுமானவை!
எனக்கு அதிகம் தெரியாது...

பூவின் வாசனை!
தேனின் சுவை ஒன்றுமே தெரியாது...
கைக்குண்டால் உலகம் பறிக்கப்படுகிறது
உடல்கள் சரிக்கப்படுகிறது!

செவியில் விழும் இசையும்..
குண்டு அதிர்வால் கசக்கிறது!
இறப்பின் கடின உணர்வு
இன்னும் ஓர் வீட்டில்
இருக்கிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலையும் செய்தேன்....
நிறைவேறாக் குறிக்கோளுக்காய்...
கனவுகள்!
பொய்கள்!
ஏமாற்றங்களும் அரங்கேறும்!

பதிவுகளான் சமனிலைக்காய்...
கொலைகளும் தயாராகும்
நாங்கள்!
முகாம் திரும்பும் போது....

வெறுமையான கொடியுடன்
வரவேற்பதற்காய்!
பூவும் மங்கையும்...

எனக்கு அதிகம் தெரியாது...
ஒன்றுமட்டும்...
நான் மடியப் போகும் இயந்திரம்
என்பது மட்டுமே தெரிகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு யூலையில் ஒரு நெருப்பு மலர்

வெடித்தது சிங்களவாதப் பூதம்
துடித்தது தமிழினம்,
தெருவெங்கும் துரத்தி வெட்டினர்.
தார்ப்பீப்பாய்க்குள் கொதிக்கப் போட்டான்
தோசைக்கல்லில்
பாலகரை வேகவைத்தான்
கடுக்கன் குத்தியதால்
காதை வெட்டி எறிந்தான்.
கோவிலில் புகுந்தவரை
கத்தியால் வெட்டினர்!

அநியாய அகோரம்
ஒரு நாள் கொழும்பு வீதியில் அரங்கேறியது
தீவளர்க்கும் யாக மேடையில்
உடலை எரித்தனர்
தெய்வ சன்னதியிலே
தலைகளைக் கொய்தனர்
பிஞ்சுப்பாலகரை அடித்தனர் கொன்றனர்
கும்பிட்ட கைகளைக் கோடரியால் வெட்டினர்?

கொழும்பும் எரிந்தது உண்மைதான்
எரிந்தது எல்லாம்
தமிழன் சொத்துக்கள் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயரோடு எரிந்தது எல்லாம்
ரத்தம் சொட்டிய தமிழன் தலைகள்....

செய்தவன் செத்துவிட்டான்
ஆட்டியவன் ஜெயவர்த்தனா
அடங்கிவிட்டான் மண்ணுக்குள்
ஆனால் சுட்டவடு இன்னும் ஆறவில்லை
அன்று இட்டதீ
இன்றுவரை கொழுந்தாக எரிகிறது!

தமிழன் அழிந்தால் என்ன
அவன் எது நினைத்தால் எனக்கென்ன
இறுமாந்திருந்த ஜே.ஆர்
தட்டிக்கேட்க ஆளின்றி
தலைகால் தெரியாமல் துள்ளியவேளை
பொறி என வந்தான் பிரபாகரன்!

சுட்டகாயம் ஆறுமுன்னே
பதிலடி கொடுத்தான்?
வீழ்ந்த தமிழனை வெகுண்டெழ வைத்தான்
சேர்ந்திருந்த வெடிமருந்துக்கு
சிறு பொறி போதுமே
தமிழன் இனித்தலை குனியான்
தர்மமே இனிவெல்லும்
நெருப்பு மலரைப் பிரசவித்த
கறுப்பு யூலைக்கிது சமர்ப்பணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்னதியில் சரித்திரமானவன்

வரலாற்று மறவனே!
உனை இழந்த வேதனை
இன்னும் நெஞ்சில் தீயாய் கனல்கிறது...
இன்றோடு நீ சென்று
ஈராறு வருடங்கள் உருண்டோடிவிட்டன?
இதயத்தில் நினைவுகள்
பசுமையாய்த் தெரிகிறது....

முகமுடியின்
சுயஉருவை உரித்துக் காட்டியவன்....
தகிக்கும் வெயிலிலும்
தண்ணீர் அருந்தாமல்
தமிழனுக்காய் உயிர்விட்டவன்!

அவன்
அகிம்சைக்கு உயிர்கொடுத்தவன்
தமிழன் வேதனை போக்க
தன்னையே நெய்யாக்கி
வெளிச்சம் கொடுத்தவன்!
வரலாற்றை
வாழவைத்த உயிர் ஆயுதம்...
அந்தி கண்டு
நெருப்பாய் பொங்கியவன்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதப்படைக்கு உந்தன்
விரதம் ஏன்புரியவில்லை?
சினேகம் என வந்து
சிறகை வெட்டி புறாவின்
வேதனை ரசித்தனர்!

கொட்டும் குருதியில் தமிழன்
தலைகளை உருட்டினர்.
யுத்த தாங்கியால்
எத்தனை உயிர்களை அரைத்தனர்!

நேருவின் பேரனின்
அரசியல் சூழ்ச்சியில் நீறாகிப் போனவன்.
குடலைச் சுருக்கி
பசித்தீயில் வேகியவன்...

படைகண்டஞ்சி
தொடை நடுங்கி அவன்
விரதம் இருக்கவில்லை.
கருவி ஏந்திய வீரனாய்
களமாடி நிற்கையில்
சினம் கொண்ட வேங்கைமுன்
சிங்களம் சிதறிப் போனதும்,
விழுப்புண் அடைந்தும்
வீரமாய் போரிட்டதும்
எதிரியிடம் கேட்டுப்பார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பாகி வந்தான்
அகிம்சை பிறந்த
அசோக நாடென்றான்
அதனால்
நல்லைவீதியில்
உரிமைவேண்டி யாகம் செய்தான்!

வேடிக்கை பார்த்தவன்
தூதுவன் டிக்கிற்
துடித்து மடிவதை இரசித்து நின்றான்
வேகியது ஆவி!
புலம்பியது தமிழினம்!
செய்வது யாதென சித்தம் கலங்கியது

தெய்வ சன்னதியில் நீதி செத்தது
சம்பவம் ஒன்று சரித்திரமானது
முள்ளை முள் கொண்டெடுக்க
அன்று எமக்குத் தெரியவில்லை
தெரிந்திருந்தால் திலீபனை
மீட்டிருப்போம்
திலீபனே
உன்கனா ஈடேறும்!
மலர்கின்ற ஈழத்தின்
மனங்களில் நீ இருப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகாவரமெடுத்த சிவகுமாரன்!

உரும்பிராய் வீதியில்
உலாவந்த சூரியன்!
உணர்வுள்ள மானத்தமிழனின்
வழிகாட்டி...
அதிகார வர்க்கத்தின்
அடக்குமுறைகளை உடைத்தவன்!
சிட்டாய்ப்பறந்து
இடர்பல சுமந்து தமிழனுக்காய் உழைத்தவன்...
சிங்களர்க்கு
சாமரை வீசும் மானம்கெட்டவீணர்களால்
உயிரைவிட்ட வீரன்
கடந்தன காலங்கள்தான்
நினைவுகள் இன்னும்
நெருப்பாய்ச் சுடுகின்றன!
சிறைபட்டு வாழ்கிலும்
மடிவது மேலென்று காட்டி
நஞ்சருந்திய
நெஞ்சுரம்மிக்கவீரன் அன்று
விழுந்தது சருகல்ல
ஈழத்தை அதிரவைத்த யூரேனியம்...
அரசையே ஆடவைத்த அணுப்பிழம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறை
பயங்கரவாதக் கட்டவிழ்ப்பு
வாய்திறந்தால் கைவிலங்கென
ஊரேஅடங்கி இருக்கையில்
துடித்தான்!

வெடித்தெழுந்தான்!
தூங்கும் தமிழனைத் தட்டி எழுப்பினான்
அடித்தவனுக்கு திருப்பி அடிப்பதில்
தப்பேது என வாதிட்டான்
சரிபிழை கூறவரும் கனவான்களே - தமிழன்
குரல்வளை நெரிக்கப்பட்ட போது
எங்குபோனீர்
சாகாவரமெடுத்த சிவகுமாரனே
நீ சிந்திய குருதியில்
சுடர்விட்டெரிகிறது சுதந்திரதீபம்
இன்றும்
என்றும் உன்நினைவுகள் தொடரட்டும்...

(சிவகுமாரன் நினைவுநாளை ஒட்டி எழுதிய கவிதை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானமாயேனும் சாகவிடு!

சிறைக்கம்பிகளின் பின்னால்
முனகலுடன் நான்
எலும்புகள் உடைக்கப்பட்ட கைகளிலும்
விலங்குகள் தொங்கின.
ஒரு சாக்கடைப் பொருள்போல
ஈக்கள் மொய்க்கையில்
நிர்வாணமாய் நிற்கவைத்தனர்!

இடையிடையே அவர்கள் வந்தார்கள்
மாமிசம் புசிக்கின்ற மனிதரைப்போல்
சிங்களச் சிப்பாய்கள்....
வேற்றுக் கிரகத்தில் வந்தவனைப் போல்
வேடிக்கை பார்த்தபடி
விசாரணைகள் தொடரும்...
நீ பயங்கரவாதியா?
இடியென ஒரு வினா
இல்லை என தலை அசைக்கவும்
கழுத்திலே உணர்வில்லை
மாணவன் என முணுமுணுத்தேன்
வீங்கிப்போன தசைகளில்
ஓங்கித்தடியால் அடித்தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஒரு புலியா?
மின்சாரமாய்த் தாக்கியது
மறுகேள்வி
முகத்தை மறைத்தபடி இல்லை என்றேன்
இரும்புப் பாதணியால்
நெஞ்சில் ஒருவன் ஓங்கி உதைத்தான்!

எங்கிருந்து எந்தத் தாக்குதல்
எனத் தெரியாத வேளை
துப்பாக்கிப் பிடியால்
பல்லைப் பொத்தி பலமாக அறைவிழும்...

ஆலும் வேம்பும் போட்டு விளக்கிய
முத்துப்பற்கள்
அறுபது வயோதிபன் பற்களைப் போல
ஒன்றிரண்டு காணாமல் போகையில்
மற்றையவை ஆடுகின்றன.

போகும்போதும் வரும்போதும்
சிங்களக் கைதிகள்
காறி உமிழ்ந்தனர்
சாகும் வரம் கேட்டு
சாமியை வேண்டினேன்
மணமாய் வாழ்ந்தவன்
அடிமைப்பட்டு
அவமானமாய் வாழ்கிலும்
இறப்பதை விரும்பினேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கும் ஆஸ்திக்குமாய் இருந்த
ஒரே ஒருமகன்
ஆச்சி ஊட்டி வளர்த்த தேகம்
சிதைந்த ஓவியம்போல்
மறைந்துவிட்டது
எலும்புகளின் மீது ஒரு தோல் என
வியப்பான உருவமானேன்!

ரேகைவிழுந்த முகத்துடன்
ஆச்சியும்
சோகம் பிழியும் நெஞ்சுடன்
அப்புவும்
நம்பிக்கைக் கீற்றுடன் காத்திருப்பார்கள்...

இவர்கள்
இன்னும் என்ன தாக்குவார்கள்
இன்றோ நாளையோ உயிர்பிரியும்!
தூக்கி ஒரு ஆற்றில் வீசுவார்கள்
அன்றேல்
தப்பி ஓடினான்
சுட்டோம் என சிங்கள நாளிதழ்
செய்திபோடும்
அதுவும் போனால்
ஏதோ ஒரு குழியில்
கிருசாந்திக்கு அருகில்
இரகசியமாய் புதைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சாகப்போகும் இயந்திரம்
நாடற்றவனாய்
அடிமையாய்
கேவலமாய்
வேண்டாம் தாயே!
எனக்காக ஒருவரம் வேண்டுகிறேன்.
மானமாய் நான்
சாகவேணும் ஒரு வரம்
தாவேன்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே உனக்காக!

கருவிலேயே எனக்குக்
கலையைக் கற்றுத் தந்தவள்
பருவங்கள் பாராது
என் வளர்ச்சிக்காய் பகலிரவாய் உழைத்தவள்
தந்தையும் தாயும்
எந்தன் உயர்விற்காய்
சிந்தை தயங்காது சுகங்களைத் துறந்த
மெழுகுவர்த்திகள்
வித்தைகள் சொல்லித்தந்து
வித்தகன் ஆக்கியவள்
எத்தனை நாள் எனக்காய்
பட்டினி கிடந்தவள்

பள்ளிமுதல்
பல்கலைக்கழகம் வரை
என் வளர்ச்சிக்காய் மாடாய் உழைத்து
ஓடாய்த் தேய்ந்தவள்

ஆஸ்த்மா நோயால் அவதிப்பட்ட போதும்
அதிகாலையில் எழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி செல்லும் எனக்குப் பணிவிடை
செய்தவள்

அன்னை கைவளை ஓசை
என் காதில் இன்னும் ஒலிக்கிறது
எனக்குச் சொன்ன தாலாட்டு இன்னும்
கீதமாய் இசைக்கிறது

அவள் சொன்ன அறிவுரை
எனக்கு வேதமாய் கேட்கிறது

சொர்க்கத்தைப் பார்த்ததுண்டு
தாயின் மடிதனில் தூங்கையில்
தெய்வத்தைப் பார்த்ததில்லை
தாயே உனைக் காணும்வரை

பாலாலே அர்ச்சனை செய்தாலென்ன
ஆண்டாண்டு காலமாய் உழைத்தாலென்ன
உன்கடன் தீர்ந்திட வழியுண்டோ?

பொருள் தேடும் உலகில்
தாயின் அருள் கேட்டு வாழ்பவன்
ஐயிரண்டு மாதங்கள் எனைச் சுமந்த பாரத்திற்கு
கைநிறையக் கொடுத்தாலும் கைம்மாறு ஆகுமா?
இந்தப் பயிருக்கு
நீர்வார்த்த கார்மேகம்
கண்ணிலே அதனால் நதியோ
இதுதான் தாயே விதியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் செய்த கோலத்தால்
ஓலைக்குடிசைவிட்டு இடம் பெயர்ந்தவன்
இங்கிருந்து என்
அன்னை மடி சேரும்வரை
மாறாது மாறாது
அழுதாலும் மாறாது
ஆறாது ஆறாது
இறந்தாலும் ஆறாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னையே எண்ணிப்பார்?

ஒளியாய்
சுடர்ந்த எம் வாழ்வு
மருதடி வினாயகர்
சிதறு தேங்காயாக
சின்ன பின்னமாகி
இன்று காற்றோடு கரைந்துவிட்டது...
அன்றைய்
அரசியல்வாதிகள்
எச்சில் சோற்றுக்காய்
அடகு வைத்து
எழுதி முடித்த அடிமை சாசனத்துக்காய்
அன்று கொடுக்கும் விலை
இளசுகளின் உயிர் ஆயுதம்!

பள்ளம்
சிலர் உள்ளமாய்
இருப்பதும் தானடா
இன்னும் நாம் நாடவற்றவராய்
திரிகிறோம்...

சூறாவளியில்
ஓர் துரும்பு போல்
நாடெல்லாம் சுற்றுகிறோம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழுக்கும்
பணத்திற்கும் குடைபிடிக்கும்
வீணர்களால்
குற்றுயிரில் கிடக்கும்
என் உறவுகள்...!
இருந்தும்
ஏனோ எனக்கென்று
தனக்காக வாழ்கிறார்
எதிர்த்துக்
குரல் கொடுத்தால்
எனக்கும் விசரென்பார்?

விட்டில் பூச்சியும்
வெளிச்சம் பெறுவதற்கே
தன் உயிர் மாய்க்கிறது.
நீயோ
எதற்கும் உதவாமல்
இறக்கும்வரை
இருக்கின்றாய்...

நறுமணம்
தந்துவிட்டே
மலர்கூட வாடுகிறது...
உன்னையே
எண்ணிப்பார்
இருந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின்
உனை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்காய்
எதை செய்யப் போகின்றாய்

உன்தாய்
கட்டத் துணியின்றி
இருப்பதைப் பார்!
ஒட்டுத்துணியோடு இழுத்துப் போர்த்தி
மானம் காக்க முயல்கையில்...

அதையும் உருவிப்பார்க்கும்
சிங்களப் பேய்?

மானம் போனபின்
ஏன் இந்த வாழ்க்கை?
போர்ப்பறை கேட்கிறது
புறப்பட்டுப்போ தமிழா
மீண்டும் வந்தால்
வரவேற்க காத்திருப்பாள்
உன்தாய்...!
இன்றேல்
உன் உடல் கடலிலே
கரைந்து போகட்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்பணி தொடரட்டும்

சுட்டெரிக்கும் சூரியனிலே...
உனையே நிழலாக்கி
தொழில்புரியும்
தோழனே!

வெப்பத்தின் உச்சம்
கொட்டி நிற்க...
வாய்பிளந்து வெடித்திடும்
பாலைநிலம்...
கள்ளிச்செடியும்
துளிர்க்காத பூமியிலே!
உடல் உழைப்பை
முதலாக்கி
பசுமைப் புரட்சி செய்யும்
உழவனே!
நீயும்
ஒரு புரட்சிவீரன் தான்...

நேற்றைய
பழஞ் சோற்றிலே
நீர் கலக்கி ஒரு நேரம்
குடிக்கின்றாய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுக் கடிக்க
மிளகாய்தான்
இருந்தும்
வீரியமாய் வேலை செய்கிறாய்!

ஏர்முனையில்
நிலம்கீறி
விறைத்த கரங்களால்
பூமிப்பெண்ணை
பச்சை ஆடை போர்த்தி
பாடுபடும் பாட்டாளியே...

நீ!
மழைக்கு விண்ணப்பம்
போட்டாய்...
வானம் பார்த்து
ஏங்கி இருக்காமல்...
ஆழக்குழி தோண்டி
நீரைப் பிரசவித்து...
பயிர்செய்யும்
வீரனே!

ஏழையின் பசிதீரும் வரை
ஏர்பிடிக்கும் வீரனே!
என்றும் நீ
வாழியவே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கவிதைகள்

பாதுகாப்புக் கொடுக்கிறார்
அப்பாவி மக்களுக்கல்ல
குற்றவாளிகளுக்கு
சிறைதனில் வாடும்
குற்றமற்ற இளைஞர்
வெளிதனில் உலவிடும்
பயங்கரமனிதர்
வேடிக்கை உலகமடா!

---

துப்பாக்கி மரம்நாட்டி
தண்ணீராய்
தமிழன் குருதி இறைக்கிறார்...

---

சிங்களத்தாங்கிகள்
உழுதது
பயிர்களை அல்ல
விடுதலை மறந்த மனங்களை

---

அவர்கள் வீசியது
வெடிகுண்டல்ல
எம் நெஞ்சிலே
ஓங்கி முளைத்திட்ட
விடுதலைப் பயிர் மணிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோவலனுக்காய்
மதுரையை எரித்தவளே
வந்துபாரேன் ஈழத்துக்கும்
எத்தனை கோவலன்கள்
அநியாயமாய் மாண்டுவிட்டார்

செம்மணியில்
தோண்டுங்கள் இன்னும்
ஆயிரம் புதைகுழிகள்
ஓயாத அலை அங்கும் வரும்
சந்திரிகா ஏற்க மறுத்தால்
புதைக்க உனக்கும்
இடம் தேவை...!

நம் கருப்பையில்
சுமப்பது
இரவல் கரு அல்ல
கருவி ஏந்திய
எம்மின வீரர்கள்

அரசியல்
சினிமா என்று
சுவர்களில் ஒட்டாதீர்
கட்டத்துணியில்லை
மானத்தை மறைக்க
சுவர்களில் ஒட்டாது எங்கள்
இடுப்பிலே ஒட்டுங்கள்!
சுவரொட்டிகளை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு மனிதன்

நாளைய மலர்வுக்காய்
இன்று
சருகாகும் வீரரே!

நாளைய விடிவிற்காய்
செங்கடலில் குதிக்கும்
சூரியர்களே!

நாளை பறக்கவிருக்கும்
சுதந்திரக் கொடிக்காய்
இன்று
காற்றிலே கறுப்புக் கொடிகள்
பறக்கின்றன...

இழப்புகள்
ஒன்றும் புதியனஅல்ல – ஆனால்?
உங்களை இழக்கையில்
எம் ஆன்மா
பதறுகிறதே!

சிதறும் மேனியெலாம்
எம்சந்ததி காக்கவெனினும்
நாம் சித்தம் கலங்கியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கிறோம்!
இடக்கை சொரியும் குருதியிலே
வலக்கை கவி எழுதுகிறது!

பழம் பிழிந்தே
சாறுகிடைக்கிறது என்று
நன்றாய் தெரிகிறது.. இருந்தும்
நாம்
வீறு கொண்டு எழாமலே
வாழ்கிறோம்...

தெறிக்கும் உங்கள் உடலிலேதான்
ஈழத்தின் வரலாறு
வரையப்படுகிறதென்பதால் தான்
இன்றும் நாம்
உமை இழக்கிறோம்!
இனி இழக்க
சவப்பெட்டி தவிர எதுவுமில்லை?
அதனால்தான்
பெட்டியே வேண்டாமல்
காற்றிலே கரைகிறீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியவில்லை!

கனவுகளே!
நினைவிழந்த நிஜங்களே!
மறக்கமுடியவில்லை...
என் அழகிய கிராமத்தை
அதன் எழில் வதனத்தை
இன்னும் மறக்கமுடியவில்லை...

வடலியும்!
உடலிலே முள்நிறைந்த கள்ளியும்
விழுதுவிட்ட ஆலமரமும்!
கொழுந்துள்ள மாமரமும்!
பன்றித்தலைச்சி அம்மனையும்
பொங்கல்
படைத்த பசுமையான நாட்களையும்
மறக்கமுடியவில்லை....

பனங்கனிக்காய்
பற்றைக்குள் புகுந்து
முட்கள் கீறி குருதிவடிய
சினந்த நாட்களை
மறக்கமுடியவில்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வேளையில்
கடற்கரை வெளியிலே
மீன்பிடிக்கும் வள்ளங்கள்
தோள்கனத்து சுமையுடன்
மீனவர்
வீசிய கொசுறுமீன்
கொத்தி எடுக்கும் காகங்கள்
என்கண்ணில் இன்னும்...

கணவனை வழிஅனுப்பி
கருவிழியில் ஏக்கமுடன்
கரைகளில்
காத்திருக்கும் பெண்கள்...

கடற்கரையது
மணல்வீடு கட்டி
அழகுபார்க்கும் சிறுவரும்!
அலைவரும்
வீடுகள் அழியும்
முகத்திலே தோன்றும்
கோபரேகைகளை இன்னும்
மறக்கமுடியவில்லை!

பச்சைப் பசேல் என்ற
பரந்த நெல்வயலும்!
தென்றல் தவழ
தலைசாயும் நெற்கதிரும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னிறவீடுகள்...
வைக்கோல் கூடுகள்...
பற்றி எரியும் வெயிலில்
நெற்றி வியர்வை சிந்தும்
என் மக்களையும் மறக்கமுடியவில்லை
இன்னும் மறக்கமுடியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றுவரை தேடுகிறோம்!

தொலைபேசியில் நலமா என்றேன்
அது இருக்கட்டும் மகன்திரும்புவானா என்றார்?
அதிலென்ன சந்தேகம்!

ஆண்டவன் இருக்கிறார் வேண்டுங்கள்.
மீண்டுவருவான் மகன்என பொய் சொன்னேன்...
கவிதைக்கும் பொய் அழகுதான்
பொய்யிலே வாழ்பவன்தான் கவிஞன்...
ஒரு சாவை மறைக்கும் பொய்
சத்தியமாய் எனக்குவராது?
மனதை இறுக்கிப் பொய் சொன்னேன்
என்ன கொடுமை ஐயா
மாட்டுவண்டியிலே உப்பெடுக்க
செம்மணி தோண்டப் போனதுண்மை
இன்று
உடலங்களைத் தேடித் தோண்டுகிறோம்
ஆசைக்கொரு மகன் என்று வாழ்ந்த
மீசை அரும்பாத சிறுவன்...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாய்நாட்டு மோகத்தால் வேறுநாடு ஓடவில்லை
இயற்கைச் சாவெனில் அமைதி அடைந்திருப்போம்
ஒரு புலியாகி போரிட்டு மடிந்திருந்தால்
பூரித்திருக்கும் மனம்...!

அம்மா மடியில் சும்மா கிடந்த சிறுவன்
அவனை இன்றும் தேடுகிறார் இன்றேல்
இறுதிக்கிரியைக்காய்
ஒரு துண்டெலும்பேனும் கொடுத்துவிடுங்களேன்...?

செம்மணியில் புதையுண்ட மகனை எண்ணி வாடும் தந்தைக்காய் 1998இல் வானலையில் வாசிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழியில்லை

சிறகிழந்த
பறவை ஒன்று
மேலெழ பார்க்கையில்...
வேடரின் கையிலே
பதம்பார்க்கும் ஆயுதங்கள்!

மறுபுறம்
வேட்டைக்காய் அலையும்
கோரப்பல் நாய்கள்!
மாமிச வேட்கையால்
வட்டமிடும்
கழுகுகளும்...

மரணத்தின் வாசலில்
அழகிய குயில்!
அமிர்தகணம்
பாடும் வாயிலே
அபயக்குரல் ஓசை!

உதவிக்கரம்...
இன்னும் நீளவில்லை எனின்?
குற்றுயிர் பறவையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்நிலை?
வன்னி மண்ணில்
என் மக்கள்
பறவையின் நிலையிலே!
ஈழத்தமிழன் சாவின் மடியிலே
என்ன செய்வது சொல்மனமே...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருக்காய் புனிதரானவர்

யாழ்நகர்
வீழ்ந்ததென எக்களிப்பவரே! .
எழுச்சிக்குத் தான்
வீழ்ச்சி என்பதை நினைத்துப்பார்...

வீழும் அருவியில்தான்
ஓடும் மின்சாரம்
உறுப்பெறுகிறது!

விண் அதிரும் படை கொண்டு
சிறு சோலை
செருகப்பட்டு விட்டதா?
செருகப்பட்டது
தமிழ்நிலமல்ல
உறைக்குள் இருந்த
கத்தியே...

ஈழ யாகத்தில்
தீயாகும் வீரர்களே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறகுகள் முடிந்தாலும்
தீ வளர்க்க எம்
இறகுகளைத் தந்திடுவோம்!

சூரியனும் சரணடைய வருகிறான்
தமிழ்ப் பெண்ணின்
கண்ணிலே பறக்கும் பொறி கண்டு!

அன்று!
ஆழ்கடலெங்கும் மிதந்தான்
கப்பல்களில் தமிழன்!
இன்றும் மிதக்கிறான்
கப்பலில் அல்ல
உப்பூறிய பிணங்களாய்!
சீனப் பெருஞ்சுவர் சிறிதாகிப் போனது
உணவுக்காய் காத்திருந்த
வன்னி மக்களின்
நீண்ட வரிசை முன்னே!

அன்னத்தின் உயிர்காக்க
போர்க்கொடி உயர்த்தியவன்
புத்தர்!
இன்றும் உயர்த்துகிறார் போர்க்கொடி
புத்தரை பூசிக்கும் சிங்களவர்
உயிர்காக்க அல்ல
தமிழனின் உயிர் எடுக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபது வயதிலும் பிறந்தநாள் விழா
கொண்டாட்டம்!
சும்மா அல்ல
பத்திரிகையில் படம் போட்டு

அவனை ஈன்ற கர்ப்பக் கிரகம்
கண்ணீரில் கரைகிறது
வன்னி மண்ணில்!

எதிரியை
துரோகியை சங்கரிக்க
துறவியானவன்!
கரும்புலி
துறவி கூட உணவை, உறவைத்தான்
வெறுப்பான்
இவனோ! உயிரையும்
வெறுப்பதால்....
துறவியையும் மேவி
புனிதராய்ப் போகிறான்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதின ஏக்கங்கள்

உழைக்கும் வர்க்கமே!
ஒரு கணம் நில்லுங்கள்
ஈழத்தின் குரல் ஒன்று உம்காதில்
விழுகிறதா?

சுட்டெரிக்கும் சூரியனும்
கடும் மழை குளிரிலும்
வியர்வை சிந்தி வேலை செய்தோம்!
இன்றுவரை நாம் பெற்றதென்ன?

எம் எலும்பை
உளி கொண்டு செதுக்கி
சிலை செய்தோம்...
எமக்கிருக்க கொட்டிலும் இல்லையே!

எம் தோலை உரித்து
ஆடைகள் தந்தோம்...
கச்சையாய் கட்ட
கோவணமும் எமக்கில்லை!

எம் குருதியை வடித்து
பானமாய் தந்தோம் ஆனால்?
நாங்கள்
தேத்தண்ணிகூட நக்கித்தான் குடிக்கிறோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகளில் தேயிலை ஒடித்தோம்
விலையாக எதைத் தந்தீர்?
தோலொடிந்த தேகமும்
கந்தல் துணியும் தான் எம்
நினைவுச் சின்னங்கள்!

வியாழன் வரை சென்று
விந்தைபுரியும் மனிதனே இங்கேவா...
நிலா ஒளியில்தான் நாம் இன்றும்
வாழ்க்கை நடத்துகிறோம்...

அமைச்சரின் பிள்ளை
அமெரிக்காவில் படிக்கிறான்
எம்பிள்ளை அரிவரிகூட
படிக்க வசதிஇல்லை, பள்ளி இல்லை....
நாம் என்றும்
கைநாட்டுகள் தான்!

உடலை உருக்கி தொழில் செய்தோம்
குடலைச் சுருக்கி பசியிருந்தோம்
இன்னும் விடியவில்லை?

எங்களின் வாயில்
விலங்குகள் போட்டுவிட்டார்
பேசமுடியவில்லை!
எம் உணர்வாவது புரிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுத்திரு சங்காரம் விரைவில் நடக்கும்!

வீழ்ந்த தமிழனை விழித்தெழ வைத்த
வல்வை மைந்தனின்
அகவை நாளிலே சேதி ஒன்று சொல்கிறேன்.
வெற்றி நிச்சயம் என
எட்டிக் குதித்தவனே!
சுற்றி அடித்த ஓயாத அலையிலே
சிதறிக்கிடக்கும் சிங்களப் படைக்கொரு
சேதி சொல்கிறேன், கேட்டுக்கொள்!

நாள்பார்த்து நல்லதொரு கோள்பார்த்து
பாதைபிடிக்க வந்த
துட்டகை முனுவின் மல்லிமாரே...
வீழ்ந்தது யாழ்நகரல்ல
ஆம் இடிந்த கட்டடங்களே?
வெற்றிச் செய்தியை சுருட்டிக் கொடுத்தாயாம்
அம்மணிக்குப் பரிசாக
வன்னியும் பிடிச்சு
பொன் முடி சூட போட்டிருந்த
கனவெல்லாம்
ஓயாத அலையிலே உருக்குலைந்து போனதுவோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு பத்தாயிரம் படை வர
மூலைக்கொரு ஆட்லெறி அணிவகுக்க
விமானம் குண்டிறைக்க தமிழனை அழிக்கவந்தாய்...
மூச்சுவிடமுன் மறவர்படை வந்தார்கள்
தாண்டிக்குளத்தில் தோண்டி எடுத்தார்கள்
ஒட்டிசுட்டானில் பட்டாளம்
கூண்டோடு போனார்கள்!
வெலி ஓயாவில் கிலிகொண்டோட
மன்னார்வரை விரட்டிவிட்டார்.

என்னென்று நினைத்தாய்
எம் தம்பிமாரை?

உன் கூச்சலும் மிரட்டலும் கண்டோட
பனங்காட்டு நரிகளாநாம்?
படை கொண்டு வந்தால் தொடை நடுங்கோம்!
நொண்டிக் குதிரை உனக்கு
ஏன் இந்த சண்டித்தனம்
மடுக்கோவில் மக்களைத்
துடிதுடிக்கக் கொன்றுவிட்டாய்.

பொறுத்திரு
இதுநல்லதிற்கல்ல
தெய்வம் நின்று கொல்லும் ஆனால்
எம் புலிவீரர் அன்றே கொல்வார்..

எம் பெண்களைத் தொட்டவன்
கைகளை வெட்டி
கதியால்கள் போட்டிடுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரி என வந்தால்
அவன் தோல் கிழித்து மேளம் அடிப்போம்!

மீண்டும் எம் மண் வந்தால்
விஜயன் வந்த பாதையிலே
ஒரிசா வரை விரட்டுவோம்.

தணல் என்றும் குளிராது!
பாறை என்றும் உருகாது!

பொறுத்திரு சங்காரம்
விரைவில் நடக்கும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழம்

தமிழனின் பெருமையை
தரணியெங்கும் முரசறைந்த
குட்டிக் குடாநாடு...
உலகத்தின் பார்வையில்
தமிழர் நாடு...
அமெரிக்கன் பென்டகனையும்
இஸ்ரேலிய மொசாட்டையும்
ஒரு கணம் திகைக்க வைத்த
தமிழர் தாயகம்!
முறத்தால் புலியடித்த
வீரப் பெண்ணை
புற நானூற்றில் பார்த்தோர்க்கு
இப்பொழுதும் உண்மையென
பறை சாற்றிய குட்டிப் பூமி!
செழித்த மரக்கறியும்
தலை சாய்க்கும் நெற்கதிரும்
ஆனையிறவு உப்பளமும்
கடல் அன்னை வழங்கும்
மீன் வளமும்
தேன்சுவை கனிகளும்
பொருண்மிய வளர்ச்சிக்காய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தொழிற்சாலைகளும்!
அறிவை வளர்த்திடும்
பாரிய கல்விச்சாலைகளும்...
பல்கலை பெற்று
பாவலராய் மாற்றிட
மூலைக்கொரு கல்வியகமும்...
துன்மார்க்கம் துறந்து
நன்மார்க்கம் பெற்றிட
ஈழம் எனும்
திரு நாட்டில்
எண்ணெய் வளம் இல்லைத்தான்
இருந்தும்...
என்ன வளம் இல்லையங்கு
செம்பாட்டு மண்ணிலே
கதலி வாழையும்
சந்திக்கொரு கோவிலும்...
இவ்வளவு செல்வத்தை
அள்ளித்தந்த
அழகான திருநாடே
என் தமிழ் ஈழமாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் பிரிந்த நேசக் குழந்தை!

பாடும் பூங்காற்றே
ஓடும் மேகமே
ஒரு நொடி நில்லுங்கள்
ஈழப்பக்கம் போகும்போது
எந்தன் ஏக்கத்தையும் சொல்லுங்கள்!

இடி இடித்துத்தானே
மழை பொழிகிறது...
மண்ணைப் பிடித்துதானே
கண்ணைப் பறிக்கும் வைரம் கைகளிலே சேர்கிறது...
வலி எடுத்துத்தானே
பிரசவம் நடக்கிறது...
கண்ட துன்பமெல்லாம் ஆறுமுன்னே
ஆண்ட நிலமெல்லாம்
மீண்டுவரும் செய்திகேட்டு
ஆடிப் பாடுகிறோம்!

ஆனையிறவிலும்
வானில் பறக்கிறதாம் புலிக்கொடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்ட புலிக்கு வாழ்த்துக்கள்
மீட்பிலே மாண்டபுலிக்கு
வீர வணக்கங்கள்!

காவல் போட்ட
ஏவல்பேயெல்லாம்
ஓடிப்போன செய்தி அறிந்தேன்?
நாவற்குழி மண்ணும்
நுணாவில் குளமும் நலமா எனக்கேளுங்கள்?
தேசம் பிரிந்து சென்ற
நேசக்குழந்தை ஒன்றின்
பாசக் கடிதமதை
காற்றே
பக்குவமாய்க் கொடுப்பாயா?
நலமதை இழந்து
நலிவுடன் வாழும் ஏக்கம்
நெஞ்சில் இன்னும் தொடர்கிறது...
வரத்தான்
அன்னைமடி சேரத்தான் துடிக்கிறேன்...
கோணமலையில் வந்திறங்கினால்
காது ஓட்டை பார்த்து அடிக்கிறானாம்!

கொழும்பில் வந்து சேர்வதென்றால்
களுத்துறைச் சிறையிலடைத்து
கண்களைப் பிடுங்குகிறானாம்
பூங்காற்றே
ஒன்று புரியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இழந்தாலும்
கண்ணை இழக்கமாட்டேன்
ஈழம் மலர்கையில்
புலிக்கொடி வானில் பறக்கையில்
காணாக்காட்சியை
கண்டபின்னே...
சொல்லு பூங்காற்றே
ஓடிப்போய் இதைக்
காதிற் சொல்லு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி!



மட்டுவில் ஞானக்குமாரன்

மட்டுவில் ஞானகுமாரன் அவர்களை முதலில் ஒரு ஆசிரியராகவே தெரிந்து கொண்டேன். பின்னர் அவரின் கவிதைகளை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தமது உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்ச்சிகளை அப்படியே தமது கவிதை வரிகளில் வெளிப்படுத்திக் காட்டுவார். அது மட்டுமின்றி நமது நாட்டின் போராட்ட காலகட்டங்களில் நமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் அவர்கள் சந்திக்கும் துயரங்களையும் மிக ஆழமாகவும், அற்புதமாகவும் வெளிக்காட்டியுள்ளார்.

கவிதை மட்டுமின்றி சிறுகதை, நாடகம் போன்ற துறைகளையும் அவர் விட்டுவைக்கவில்லை. ஈழமுரசு பத்திரிகையிலும், இளைஞன், எரிமலை, களத்தில், மண், பூவரசு போன்றவற்றிலும் சமகால நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ஐ.பி.சி வானொலிக்கும் தமது ஆக்கங்களை எழுதி அனுப்பத் தவறவில்லை. ஐ.பி.சி யில் போராட்ட நிகழ்வுகளையும், வரலாறுகளையும் கவிதையாகவும், சிறுகதையாகவும், நாடகமாகவும் வெளியிட்டுள்ளார். இவை எல்லாவற்றுடன் அவர் தம்மை ஒரு சிறந்த நடிகனாகவும் வெளிக்காட்டியுள்ளார். இவர் படைப்புகள் யாவும் காலத்தின் கண்ணாடியாக வெளிப்படுகின்றன என்று கூறினால் அது மிகையல்ல. தொடர்ந்து இதே போல காலத்தின் பதிப்புகளை படைத்து புகழ்பெற என் வாழ்த்துக்கள்.

திருமதி.சித்ரா சிறிகந்தராசா பி.ஏ.
(யாழ்ப்பாணம்)
தமிழாலய ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org